**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

<u>அசல் வழக்கு எண். 178/1996</u>

நாள் 28.07.2022

<u>பெயர். ஜெகன்னாதன் கவுண்டர் த/பெ. கோபால் கவுண்டர்</u>

<u>வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. கோபால் கவுண்டர் தற்போது காலமாகிவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 67 20.5.1959 தேதியிட்ட கிரயமானது நானும் என் தந்தை கோபால் கவுண்டர் என்பவரும் தனம்மாள் என்பவருக்கு கிரயம் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி தனம்மாளுக்கு கிரயம் கொடுத்த என் தாத்தா குமாரசாமி சம்பாதித்த சொத்து ஆகும். மேற்படி குமாரசாமிக்கு சொத்து எவ்வாறு வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது அது என் தாத்தா சொத்து ஆகும். என் தாத்தா சொத்து என்பதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் பெயரில் பத்திரம் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. எனக்கும் என் தந்தைக்கும் மேற்படி கிரயம் செய்த சொத்து மூதாதையர் சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.67 ல் குமாரசாமிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.67ல் கண்ட சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வா.சா.ஆ.67ல் வந்த கிரய பணத்தை வைத்து 17.12.1959ம் ஆண்டு 64 சென்ட் கிரயம் வாங்கினோம். 17.12.1959 தேதியிட்ட கிரய பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 64 சென்ட்டை என் தந்தை பெயரில் வாங்கினோம் என்றால் சரிதான். மேற்படி 64 சென்ட் சர்வே எண் எனகக்கு தெரியாது ஆனால் இவ்வழக்கில் காண்பித்துள்ளேன். கோபால் பெயரில் உள்ள கிரய பத்திரங்கள் அனைத்தும் அவர் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.67 கிரயமானது குப்பம்மாளிடம் போட்டுள்ள போக்கியத்தை பைசல் செய்ய தான் கிரயம் கொடுத்தோம் என்றால் சரியல்ல. கன்னியப்ப கவுண்டரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர் தந்தை பெயர் குப்பன் ஆகும். நானும் கோபால் கவுண்டர் அவர் சகோதரர் சுப்பிரமணி கன்னியப் கவுண்டர் மைனர் குப்புசாமி அகியோர் சேர்ந்து 17.12.1965ம் தேதி 77 சென்ட் கிரயம் செய்து விட்டோம். அது வா.சா.ஆ.68 ஆகும் மேற்படி 77 சென்ட் விற்று விட்டு அதன்மூலமாக வந்த பணத்தை வைத்து என் தந்தை பெயரில் 77 சென்ட் கிரயம் வாங்கினோம். மேற்படி 77 சென்ட்டுக்கான சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்படி என் தந்தை பெயரில் வாங்கிய 77 சென்ட் அவர் சுயசம்பாதிய சொத்து என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 68 ல் நான் கிரயம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4. கோபால் கவுண்டரும் மற்றும் சுப்பிரமணி கவுண்டரும் கன்னியப்ப கவுண்டருக்கு கிரயம் கொடுத்தது தெரியுமா என்றால் தெரியும் அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். கன்னியப்பனுக்கு நான் எதுவும் கிரயம் கொடுக்வில்லை என்றாலும் அதனால் அதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.69 நானும் என் தந்தையும் முனுசாமி கவுண்டருக்கு கிரயம் கொடுத்தோம் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ. 69 முனுசாமி கவுண்டருக்கு 12 சென்ட் ரூ.200/.க்கு கிரயம் கொடுத்தோம். மேற்படி ரூ.200/- பணத்தை என் தங்கை அம்சா திருமணத்திற்காக செலவு செய்துவிட்டோம். வா.சா.ஆ.70 நானும் என் தந்தையும் 48 சென்ட்டை என் சித்தப்பா சின்னதுரை கவுண்டருக்கு ரூ.200/-க்கு கிரயம் கொடுத்தோம். வா.சா.ஆ.70 கிரயமானது குடும்ப செலவு மற்றும் திருமணத்திற்காக விற்றோம். வா.சாக.ஆ.69 மற்றும் வா.சா.ஆ.70 ஆகிய சொத்துக்கள் என் தந்தை சுயமாக சம்பாதித்த சொத்து என்றாலும் என் தாத்தா சொத்தக்கள் அதனாரல் நான் கையொப்பம் செய்தேன். குமாரசாமி கவுண்டர் சம்பாதித்த சொத்து என்பதை காண்பிக்க எந்தவிதமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் மேற்படி கோபால் கவுண்டர் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றாலும் சரியல்ல. கோபால் கவுண்டர் அவரது பேரன் லோகநாதனுக்கு மற்றும் மகள்களுக்கு செட்டில் மென்ட்

ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. கோபால் கவுண்டருக்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமை இல்லை எனறு நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. கோபால் கவுண்டர் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைத்து பல வருடங்கள் கழித்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.